පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

| தரம் |
| --- |
| 10 |

**மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023**

**இஸ்லாம்**

பாடசாலையின் பெயர் : ..........................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................

.......................................................................................... நேரம் : **3** மணித்தியாலம்

## பகுதி I

**எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**

1 **தொடக்கம் 40 வரையான வினாக்கள் ஒவ்வொன்றிற்கும் பொருத்தமான விடையைத் தெரிவு செய்க.**

**1.** இஸ்லாத்தின் நம்பிக்கைகளைத் தொகுத்துத் தரும் கலை,
(1) இல்முல் பிக்ஹு (2) இல்முல் ஹதீஸ்
(3) இல்முல் அகாஇத் (4) உலூமுல் குர்ஆன்

**2.** ஈமான் கொள்ள வேண்டிய விடயங்களுள் ‘அஸ்ஸம்இய்யாத்’ எனும் பிரிவில் உள்ளடங்குவது,
(1) அல்லாஹ், கழாகத்ர் தொடர்பான நம்பிக்கை.
(2) சட உலகுக்கும் புலன்களுக்கும் அப்பாற்பட்டவை தொடர்பான நம்பிக்கை.
(3) நபிமார்கள், வேதங்கள் தொடர்பான நம்பிக்கை.
(4) மறுமை வாழ்வுடன் தொடர்பான நம்பிக்கை.

**3.** நற்பண்புகளைக் குறிக்கப் பயன்படும் சொல் அல்லாதது,
(1) குலுக் ஹஸன் (2) அக்லாக் ஹஸனா
(3) அமானத் (4) மகாரிமுல் அக்லாக்

**4.** நபிமார்களுள் முப்பது ஸுஹுபுகள் அருளப்பட்ட நபி,
(1) இப்றாஹீம் அலைஹிஸ்ஸலாம் (2) இத்ரீஸ் அலைஹிஸ்ஸலாம்
(3) மூஸா அலைஹிஸ்ஸலாம் (4) ஷீது அலைஹிஸ்ஸலாம்

**5.** அல்குர்ஆனில் ‘‘ஸாதிகூன்’’ எனக் குறிப்பிடப்படுவோர்,
(1) உண்மையான இறைவிசுவாசிகள் (2) வழிதவறியோர்
(3) கடன்காரர்கள் (4) அநாதைகள்

**6.** நிரல் ‘‘அ’’ பகுதியை நிரல் ‘‘ஆ’’ பகுதியுடன் இணைத்தால் வரும் சரியான விடைத்தொகுதி,

| ‘‘அ’’ | ‘‘ஆ’’ |
| --- | --- |
| 1. சுப்ஹானல்லாஹ் | A. தக்பீர் |
| 2. அல்ஹம்துலில்லாஹ் | B. தஸ்பீஹ் |
| 3. அல்லாஹு அக்பர் | C. தல்பிய்யா |
| 4. லப்பைகல்லாஹும்ம லப்பைக் | D. தஹ்மீத் |

(1) ACDB (2) BDCA (3) CDBA (4) BDAC

7. ''முஜாஹதுன் நப்ஸ்'' எனும் பதம் குறித்துக் காட்டுவது,
   (1) திருப்தியடைந்த உள்ளம் (2) தீமையை ஏவும் உள்ளம்
   (3) உளப்போராட்டம் (4) அமைதியடைந்த உள்ளம்

8. அரேபியாவில் கடும் பஞ்சமும் வரட்சியும் ஏற்பட்ட வேளை முஸ்லிம்களுக்கு எதிராக ஒரு பெரும் படையைத் திரட்டி யுத்தத்திற்கு ஆயத்தமானவன்,
   (1) ஹிரக்கீலியஸ் (2) ஹுர்முஸான்
   (3) றுஸ்தும் (4) முகவ்கிஸ்

9. குல்லத்தைன் அளவை விடக் கூடிய தண்ணீர் அழைக்கப்படும் விதம்,
   (1) மாஉன் கலீல் (2) மாஉன் கஸீர்
   (3) மாஉன் முஸ்த.்.மல் (4) மாஉன் தாஹிர்

10. மனிதன் மூன்று கூறுகளால் ஆக்கப்பட்டுள்ளான். அவை,
   (1) அறிவு, திறன், மனப்பாங்கு (2) ஆன்மா, உயிர், உடல்
   (3) உடல், அறிவு, தோற்றம் (4) உடல், அறிவு, ஆன்மா

11. ஸகரிய்யா (அலை) அவர்கள் தம் சமூகத்தாருக்கு அல்லாஹ்வைத் தொழவும், புகழவும் கற்றுக் கொடுத்த விதம் உள்ளடங்கும் வஹியின் வகை,
   (1) வஹி மத்லுவ்வு (2) தர்தீபுன் நுஸுல்
   (3) வஹி கைரு மத்லுவ்வு (4) தர்தீபுத் திலாவத்

12. பாவங்களின் பால் இட்டுச்செல்பவைகளும் பாவங்களே என்பதை விளக்கும் துணை மூலாதாரம்,
   (1) ஷத்துத் தராஇ (2) அஷ் ஷராயிஉஸ் ஸாபிகா
   (3) உர்பு (4) கவ்லுஸ் ஸஹாபி

13. இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபிய சமூக அமைப்பில் ''ஷைகு'' என அழைக்கப்பட்டவர்,
   (1) குடும்பத் தலைவர் (2) ஊர் தலைவர்
   (3) கோத்திரத் தலைவர் (4) பிரதேசத் தலைவர்

14. ஸூரா லுக்மான், ஸூரா புர்கான் ஆகியவற்றில் குறிப்பிடப்படும் முக்கியமான அம்சங்களில் ஒன்று,
   (1) ஸகாத் பெறும் கூட்டத்தினர் (2) அஜ்னபி, மஹ்ரமி உறவுமுறை
   (3) வாரிசுரிமைச் சட்டங்கள் (4) இறையடியார்களின் பண்புகள்

15. மலக்குமார்களின் உதவியுடன் முஸ்லிம்களால் வெற்றிகொள்ளப்பட்ட யுத்தம்,
   (1) ஹுனைன் (2) கைபர் (3) ஹுதைபிய்யா (4) பத்ர்

16. நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை வரலாற்றை ''ஸீறத் ரஸூலுல்லாஹ்'' என்ற பெயரில் தொகுத்தவர்,
   (1) முஹம்மத் பின் இஸ்ஹாக் (2) முஹம்மத் அப்துல் மலிக் பின் ஹிஷாம்
   (3) முஹம்மத் அல்கஸ்ஸாலி (4) ஸ.்.பிய்யுர் ரஹ்மான் முபாரக்பூரி

17. இஸ்லாமிய பொருளாதார செயற்பாடுகள் அழைக்கப்படும் விதம்,
   (1) இபாதாத் (2) முஆமலாத் (3) ஜினாயாத் (4) முனாகஹாத்

18. ''உண்ணுங்கள், பருகுங்கள் எனினும் அளவு கடந்து விரயம் செய்யாதீர்கள்'' எனும் கூற்று,
   (1) அல்குர்ஆனுடையது (2) அல்ஹதீஸினுடையது
   (3) ஸஹாபாக்களுடையது (4) இமாம்களுடையது

**19.** இஸ்லாமிய பொருளாதாரத்தின் கோட்பாட்டு ரீதியான அடிப்படைகளில் ஒன்று,

(1) பிறர் உழைப்பில் வாழ்வது குற்றமாகும்.

(2) செலவு, சேமிப்பு இரண்டிலும் நடுநிலைத்தன்மையைப் பேணவேண்டும்.

(3) தனிநபர் சொத்தில் சமூகத்திற்கும் பங்குண்டு.

(4) சொத்துக்கள் முதலாளிகளுக்கே உரியன.

**20.** இஸ்லாமிய வரலாற்றில் ஸ்பெய்னை வெற்றிகொண்ட முஸ்லிம் தளபதி,

(1) தாரிக் பின் ஸியாத் (2) முஹம்மத் பின் காஸிம்

(3) முஹம்மத் அல்பாத்திஹ் (4) காலித் பின் வலீத் (ரழி)

**21.** உழைப்பின் முக்கியத்துவத்தைக் குறிப்பிடும் அத்தியாயங்களில் ஒன்று,

(1) ஸூரத்துல் ஜும்ஆ (2) ஸூரத்துல் முஹா

(3) ஸூரத்துல் மாஊன் (4) ஸூரத்துல் கியாமா

**22.** பின்வரும் ''அ'' பகுதியிலுள்ள அரபுப் பதங்களை ''ஆ'' பகுதியிலுள்ள தமிழ் பதங்களுடன் இணைக்கும் சரியான தொடர்,

| ''அ'' | ''ஆ'' |
|---|---|
| 1. இக்ர.". | A- நாஸ்திகம் |
| 2. வஹி மத்லு.". | B- ஓதுவீராக! |
| 3. இல்ஹாத் | C- வஹியை எழுதுவோர் |
| 4. குத்தாபுல் வஹி | D- போலி நபி |
| 5. முதநப்பி | E- ஓதிக்காண்பிக்கப்பட்ட வஹி |

(1) CDAEB (2) AEBDC (3) ABEDC (4) BEACD

**23.** ஆதம் (அலை) அவர்கள் மூலம் அறிமுகமான இரு தொழில் நடவடிக்கைகள்,

(1) விவசாயம், நெசவு (2) வியாபாரம், உருக்குத் தொழில்

(3) தச்சு, மந்தை மேய்த்தல் (4) விவசாயம், மந்தை மேய்த்தல்

**24.** வலை பின்னி சீவியம் நடாத்திய உம்மஹாத்துல் மு.".மின்களில் ஒருவர்,

(1) ஸைனப் பின்த் ஹுஸைமா (ரழி) (2) ஹப்ஸா பின்த் உமர் (ரழி)

(3) கதீஜா பின்த் குவைலித் (ரழி) (4) ஸைனப் பின்த் ஜஹ்ஷ் (ரழி)

**25.** புலமை சார்ந்த சேவைத் தொழில்களில் ஒன்று,

(1) காவல் பணி (2) சிற்றூழியத் தொழில்

(3) கற்பித்தல் (4) காரியாலய உதிரித் தொழில்

**26.** பின்வருவனவற்றுள் மஹ்ரமி அல்லாத உறவுமுறை,

(1) தந்தையின் சகோதரரின் மகள் (2) தாயின் சகோதரி

(3) மகனின் மனைவி (4) மகளின் புதல்வி

**27.** ''நடுநிலை சமுதாயம்'' என்பதைக் குறிக்கும் சொற்றொடர்,

(1) உம்மதன் வாஹிதா (2) உம்மதன் வஸதன்

(3) கைரு உம்மத் (4) உம்மதன் முஸ்லிமா

**28.** இஸ்லாமிய வரலாற்றில் ஹுதைபிய்யா உடன்படிக்கை இடம்பெற்ற ஆண்டு,

(1) ஹிஜ்ரி 4 (2) ஹிஜ்ரி 5 (3) ஹிஜ்ரி 6 (4) ஹிஜ்ரி 7

**29.** ஒரு முஸ்லிம் உணவுக்கென தனது வயிற்றில் வகுத்துக்கொள்ள வேண்டிய பகுதி,

(1) அரைவாசி (2) மூன்றில் ஒன்று (3) நான்கில் ஒன்று (4) மூன்றில் இரண்டு

**30.** நபியவர்கள் மதீனாவில் வாழ்ந்த யூதர்களுடன் செய்து கொண்ட உடன்படிக்கை,

(1) ஹுதைபிய்யா உடன்படிக்கை (2) மதீனா சாசனம்
(3) அகபா உடன்படிக்கை (4) பைஅத்துர் ரிழ்வான்

**31.** ஆணும் பெண்ணும் தனித்திருத்தலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக்கொள்வது,

(1) மக்ரூஹ் (2) ஜாயிஸ் (3) ஹறாம் (4) முஸ்தஹப்

**32.** ''இஸ்லாமிய சட்டவியல் ஒரு சர்வதேசப் பார்வை'' என்ற நூலை எழுதியவர்,

(1) அறிஞர் எம்.சீ.சித்திலெப்பை (2) ரீ.பீ.ஜாயா
(3) சட்டத்தரணி கருனாரத்ன தேரர் (4) கலாநிதி சீ.வீ.வீரமந்திரி

**33.** 'அர்ரிஸாலா' என்ற நூலின் மூலம் உஸூலுல் பிக்ஹை தொகுத்தளித்த இமாம்,

(1) இமாம் புகாரி (ரஹ்) (2) இமாம் ஷீபவைஹி (ரஹ்)
(3) இமாம் ஷாபிஈ (ரஹ்) (4) இமாம் முஸ்லிம் (ரஹ்)

**34.** இஸ்லாத்திற்கு முற்பட்ட அரேபிய சமூக அமைப்பில் காணப்பட்ட ''கபீலா'' என்பது,

(1) கோத்திரம் (2) கோத்திர உணர்வு (3) கிளைகள் (4) கோத்திரத் தலைவர்

**35.** அதிகமானோர் அலட்சியம் செய்யும் இரு அருட்கொடைகள் என ஹதீஸ் குறிப்பிடுவது,

(1) ஓய்வு, நிம்மதி (2) கல்வி, செல்வம்
(3) ஆரோக்கியம், ஓய்வு நேரம் (4) ஆரோக்கியம், வீரம்

**36.** 'பிக்ஹுல் அவ்லவிய்யாத்' என்பதன் மூலம் கருதப்படுவது,

(1) சலுகை வழங்கப்படவேண்டியவை பற்றிய சட்டநோக்கு
(2) சிறுபான்மையினர் தொடர்பான சட்டநோக்கு
(3) நெகிழ்வுபடுத்தப்படவேண்டியவை பற்றி சட்டநோக்கு
(4) முதன்மைப்படுத்தப்படவேண்டிவை பற்றிய சட்டநோக்கு

**37.** ஜாஹிலிய்யாக் காலத்தில் இணைவைப்பில் ஈடுபடாதோரைக் குறிக்கும் பதம்,

(1) ஹனீப்கள் (2) முல்ஹித்கள் (3) முஷ்ரிக்குகள் (4) காபிர்கள்

**38.** ஸஹீஹுல் புகாரி உள்ளடக்கியுள்ள ஹதீஸ்களின் எண்ணிக்கை,

(1) 4000 (2) 4800 (3) 7275 (4) 4341

**39.** தொழுகையில் ஏற்படும் மறதிக்காக நிறைவேற்றப்படும் ஸுஜூத்,

(1) ஸஜ்தா திலாவத் (2) ஸஜ்தா ஷுக்ர் (3) ஸஜ்தா ஸஹ்வு (4) ஸஜ்தா ஸலாத்

**40.** ''ஸலாத்துல் கவ்ப்'' எனப்படும் தொழுகை,

(1) அச்சநிலை தொழுகை (2) மழை வேண்டித் தொழும் தொழுகை
(3) கிரகணத் தொழுகை (4) முற்பகல் நேரத் தொழுகை

(40x1=40 புள்ளிகள்)

## பகுதி II

- ❖ **முதலாம் வினா கட்டாயமானது.**
- ❖ **ஏனையவற்றுள் நான்கு வினாக்களைத் தெரிவு செய்து மொத்தம் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.**
- ❖ **முதலாம் வினா 20 புள்ளிகளையும், ஏனைய வினாக்கள் 10 புள்ளிகளையும் கொண்டதாகும்.**

**(01) சுருக்கமான விடை தருக.**

1) தொழுகையை விடுவதால் உலகில் ஏற்படும் விபரீதங்கள் **இரண்டு** தருக.
2) செல்வங்களினால் அதிக நன்மைகளை அடைந்துகொண்ட ஸஹாபாக்கள் **இருவரைத்** தருக.
3) விவசாய பொருளீட்டல் முயற்சியின் **இரு** வகைகளையும் குறிப்பிடுக.
4) சிறந்த தொழில் என ஹதீஸில் குறிப்பிடப்பட்ட **இரு** தொழில் நடவடிக்கைகள் எவை?
5) வியாபார நடவடிக்கைகளில் ஈஜாப், கபூல் என்பதன் மூலம் குறிப்பிடப்படுவது யாது?
6) அஜ்னபி, மஹ்ரமி என்பவற்றின் கருத்துக்களைத் தருக.
7) இளமைப் பருவத்தை இஸ்லாத்தின் வளர்ச்சிக்காக தியாகம் செய்த **இரு** நபிமார்களைத் தருக.
8) 'ரப்புல் ஆலமீன", ''ரஹ்மதுன் லில்ஆலமீன்'' என்பதன் கருத்துக்களை முறையே எழுதுக.
9) ஜாஹிலிய்யக் காலப் பெண்களின் பணிகள் **நான்கைக்** குறிப்பிடுக.
10) இஜ்மாவை பின்பற்றும் போது அதனால் கிட்டும் பயன்கள் **இரண்டு** தருக.

(2x10 =20 புள்ளிகள்)

**(02)** i) தூய அகீதாவுக்கு முரணான வழிதவறிய குழுக்கள் **நான்கைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) இபாதத், இமாரத், கிலாபத் எனும் பதங்களை விளக்குக. (3 புள்ளிகள்)

iii) இபாதத்களின் நோக்கங்கள் **ஐந்தினை** விபரிக்குக. (5 புள்ளிகள்)

**(03)** i) ஹிதாயத், ரிஸாலத் எனும் பதங்களை வரைவிலக்கணப்படுத்துக. (2 புள்ளிகள்)

ii) இஸ்லாம் வழங்கியுள்ள மனித உரிமைகள் **மூன்றை** எழுதுக. (3 புள்ளிகள்)

iii) அல்குர்ஆனில் ஸூரா லுக்மான் போதிக்கும் **ஐந்து** உபதேசங்களைத் தருக. (5 புள்ளிகள்)

**(04)** i) இஸ்லாம் கூறும் ஆன்மீகப் பண்புகளில் **நான்கைக்** குறிப்பிடுக. (2 புள்ளிகள்)

ii) வியாபாரத்தில் வாங்குவோர், விற்போருக்கான நிபந்தனைகள் **மூன்றையும்** தருக. (3 புள்ளிகள்)

iii) இஸ்லாமிய பொருளாதார முறைமையின் சிறப்பம்சங்கள் **ஐந்தைக்** குறிப்பிடுக. (5 புள்ளிகள்)

**(05)** i) இகாமதுஸ் ஸலாத், முஹாபழதுஸ் ஸலாத் என்பவற்றின் கருத்துக்களைத் தருக. (2 புள்ளிகள்)

ii) மறுமையில் நரகைக் காணமாட்டாது என ஹதீஸ் கூறும் மூவரது கண்களும் எவை? (3 புள்ளிகள்)

iii) அந்நிய ஆண்,பெண் தமக்கிடையே பேணவேண்டிய வரையறைகள் **ஐந்து** தருக. (5 புள்ளிகள்)

**(06)** i) உழைப்பு பற்றிய அல்குர்ஆன் வசனம் அல்லது அல்ஹதீஸ் **ஒன்றைத்** தருக. (2 புள்ளிகள்)

ii) வியாபார கொடுக்கல் வாங்கலின் போது தடுக்கப்பட்ட அம்சங்கள் **மூன்று** தருக. (3 புள்ளிகள்)

iii) அன்றாட வாழ்வை இபாதத்தாக மாற்றுவதற்கான நிபந்தனைகள் **ஐந்தையும்** தருக. (5 புள்ளிகள்)

**(07) பின்வருவனவற்றுள் இரண்டிற்கு சிறுகுறிப்பு எழுதுக.**

i) உள ஆரோக்கியம்

ii) வஸதிய்யா

iii) நபிகளாரின் ஸீறா

iv) கைத்தொழில்

(5x2=10 புள்ளிகள்)

පළාත් අධ්‍යාපන දෙපාර්තමේන්තුව - උතුරු මැද පළාත
மாகாணக் கல்வித் திணைக்களம் - வட மத்திய மாகாணம்
DEPARTMENT OF EDUCATION – NORTH CENTRAL PROVINCE

தரம் 10

மூன்றாம் தவணைப் பரீட்சை - 2023
இஸ்லாம்

பாடசாலையின் பெயர் : ..........................................................................................

மாணவர் பெயர்/ சுட்டெண் : ..........................................................................................

நேரம் : 3 மணித்தியாலம்

## விடைகள்

### பகுதி - I

**(01)**

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 01) | 3 | 11) | 3 | 21) | 1 | 31) | 3 |
| 02) | 4 | 12) | 1 | 22) | 4 | 32) | 4 |
| 03) | 3 | 13) | 3 | 23) | 4 | 33) | 3 |
| 04) | 2 | 14) | 4 | 24) | 4 | 34) | 1 |
| 05) | 1 | 15) | 4 | 25) | 3 | 35) | 3 |
| 06) | 4 | 16) | 1 | 26) | 1 | 36) | 4 |
| 07) | 3 | 17) | 2 | 27) | 2 | 37) | 1 |
| 08) | 1 | 18) | 1 | 28) | 3 | 38) | 3 |
| 09) | 2 | 19) | 3 | 29) | 2 | 39) | 3 |
| 10) | 4 | 20) | 1 | 30) | 2 | 40) | 1 |

### பகுதி -II

**(01)**

i. இஸ்லாத்திலிருந்து தூரமாக்கப்டுவார், மன நிம்மதியை இழப்பார், பாவச் செயல்களில் வீழ்ந்துவிடுவார் *(வேறு பொருத்தமான விடயங்கள் குறிப்பிடப்பட்டிருப்பின்)*

ii. அபூபக்ர் (ரழி), கதீஜா (ரழி), உஸ்மான் (ரழி), அப்துர் ரஹ்மான் இப்னு அவ்ப் (ரழி) *(எவரேனும் இருவர்)*

iii. பயிர்ச் செய்கை, கால்நடை வளர்ப்பு

iv. கைத்தொழில் , பொய் கலக்காத வர்த்தகம்

v. ஈஜாப் : விற்பவர் ஒரு பொருளை விற்றதாக ஏற்றுக்கொள்ளல், கபூல் : வாங்குபவர் குறித்த பொருளை வாங்குவதை ஏற்றுக்கொள்ளல்

vi. அஜ்னபி - திருமணம் முடிக்க அனுமதிக்கப்பட்டவர், மஹ்ரமி : திருமணம் முடிக்க அனுமதிக்கப்படாத உறவினர்

vii. இப்றாஹீம் (அலை), மூஸா (அலை), யூஸுப் (அலை), முஹம்மது (ஸல்) ஆகியோர் *(எவரேனும் இருவர்)*

viii. ரப்புல் ஆலமீன் - அகிலத்தாரின் இரட்சகன், ரஹ்மதுன் லில்ஆலமீன் - அகிலத்தார்களுக்கான அருட்கொடை

ix. விறகு பொறுக்குதல், உணவு சமைத்தல், நீர் சுமந்து வருதல், பால் கரத்தல், நூல் நூற்றல், பிள்ளை பராமரித்தல் *(ஏதேனும் நான்கு)*

x. சமூகத்தில் ஒற்றுமை பேணப்படல், சமூகத்தில் கட்டுப்பாடு குலையாதிருத்தல், பரஸ்பர உதவியின் அடிப்படையிலான வாழ்வுக்கு வழியமைத்தல் *(ஏதேனும் இரண்டு)*

**(02)**

i. மு.ஃதஸிலா, கவாரிஜ், ஷீஆ, ஜபரிய்யா, கதரிய்யா *(ஏதேனும் இரண்டு)*

ii. இபாதத் - அல்லாஹ்வை வணங்கி வழிப்படுதல்.
இமாரத் - பூமியை வளப்படுத்துதல்.
கிலாபத் - பூமியில் அல்லாஹ்வின் பிரதிநிதியாக இருந்து அதனை நிருவகித்தல்.

iii. உள்ளத்தைப் பக்குவப்படுத்தல் மற்றும் இறையச்சத்தை ஏற்படுத்தல்.
அல்லாஹ்வுடனான நெருக்கத்தை ஏற்படுத்தல்.
பாவங்களிலிருந்து தவிர்ந்து நடக்கச் செய்தல்.
சுவனத்தில் நுழையச் செய்தல்.

**(03)**

i. ரிஸாலத் - இறைவனால் மனித இனத்திற்கு வழங்கப்படும் வழிகாட்டல்கள், போதனைகள்
ஹிதாயத் - ரிஸாலத்தை ஏற்று வழிபடும் மனோ பக்குவம்

ii. உயிர் வாழ்வதற்கான உரிமை
சமத்துவத்திற்கான உரிமை
தனிமனித சுதந்திரத்திற்கான உரிமை
நீதி பெறுவதற்கான உரிமை
கண்ணியத்தை பாதுகாத்துக் கொள்வதற்கான உரிமை
சொத்துக்களை பாதுகாப்பதற்கான உரிமை
மத உணர்வுகளுக்கு பாதுகாப்பு வழங்கும் உரிமை *(ஏதேனும் மூன்று)*

iii. அல்லாஹ்வுக்கு எந்த ஒன்றையும் இணை வைக்க வேண்டாம்.
தொழுகையை நிலை நிறுத்துங்கள்
நன்மையை ஏவி தீமையை தடுங்கள்
உங்களுக்கு ஏற்படும் துன்பங்களின் போது பொறுமையை கடைப்பிடியுங்கள்
மனிதர்களை விட்டும் உங்கள் முகத்தை திருப்ப வேண்டாம்
பூமியில் பெருமையோடு நடக்க வேண்டாம்
நடையில் நடுநிலையான தன்மையை கடைப்பிடியுங்கள்
சப்தத்தை தாழ்த்திக் கொள்ளுங்கள் *(ஏதேனும் ஐந்து)*

(2+3+5 புள்ளிகள்)

**(04)**

i. இ.ஃலாஸ், தவ்பா, வரஉ, ஸுஹ்த்

ii. பருவமடைந்தவராக இருத்தல்
புத்தியுடையவராக இருத்தல்
வியாபாரம் பற்றிய விவரம் தெரிந்தவராக இருத்தல்

iii. தெய்வீகத் தன்மை
சமூகத்தில் ஏற்படும் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளை சீர் செய்தல்
சமூக நலனுக்கும் தனி மனித நலனுக்கும் இடையே இணக்கம் கானல்
ஆத்மீகத் தேவை லௌகீகத் தேவை ஆகிய இரண்டையும் சமகாலத்தில் கவனத்தில் கொள்ளல்
எவருக்கும் அநீதி நிகழாமை
நெகிழ்வுத் தன்மை

(2+3+5 புள்ளிகள்)

**(05)**

i. இகாமத்து ஸலாத் : தொழுகையை நிலைநிறுத்தல்

முஹாபழத்துஸ் ஸலாத் : தொழுகையை பேணி வருதல்

ii. அல்லாஹ்வின் பாதையில் விழித்திருந்த கண்
அல்லாஹ்வின் அச்சத்தால் அழுத கண்
அல்லாஹ் தடை செய்தவற்றை பார்வையிடாது தவிர்ந்து கொண்ட கண்

iii. பார்வையைத் தாழ்த்துதல்
பெண் அவ்ரத்தை முழுமையாக மறைக்கக் கூடிய வகையிலும் மரியாதையான அமைப்பிலும் ஆடை அணிதல்
நடை, உடை, பாவனை, பேச்சு போன்ற அனைத்திலும் இஸ்லாமிய ஒழுக்கங்களை பேணிக்கொள்ளல்
ஆண்களின் உணர்வுகளைத் தூண்டக்கூடிய அனைத்து விதமான காரியங்களில் இருந்தும் விலகி இருத்தல்
ஆண், பெண் தனித்திருத்தலுக்கான சந்தர்ப்பங்களை ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது
சமூக நலனையும் தேவையையும் கருத்தில் கொண்டு இரு சாராரும் சந்திக்கின்ற நிகழ்ச்சிகளில் ஆண்,பெண் கலப்பு ஏற்படக் கூடாது.

(2+3+5 புள்ளிகள்)

**(06)**

i. ‘‘ஜும்மா தொழுகை முடிந்ததும் பூமியில் பறந்து சென்று அல்லாஹ்வின் அருளை தேடி பெற்றுக் கொள்ளுங்கள்’’ (ஆல்குர்ஆன்)
‘‘நிச்சயமாக அல்லாஹ் தொழில் புரியும் விசுவாசியை நேசிக்கின்றான்’’ (அல்ஹதீஸ்)
*(ஏதேனும் பொருத்தமன அல்குர்ஆன் வசனம் அல்லது ஹதீஸ்)*

ii. தேவையில்லாத சத்தியம், அளவை நிறுவை மோசடி, பதுக்கல், நியாயமற்ற விலை விதிப்பு, கலப்படம், பொய் பேசுதல், ஏமாற்றுதல், பொதுச்சட்டங்களை மீறுதல் *(ஏதேனும் மூன்று)*

iii. ஷரீஆவின் அனுமதி
தூய்மையான எண்ணம்
ஷரீஆ வரையறைகளை மீறாதிருத்தல்
அடிப்படை வணக்கங்களுக்கு தடையின்றி இருத்தல்
நேர்த்தியாகவும் ஒழுங்காகவும் செய்தல்

(2+3+5 புள்ளிகள்)

**(07)** *பொருத்தமான விடைகள் எழுதப்பட்டிருப்பின் புள்ளி வழங்கவும்*

i. *தரம் 10 - பாடநூல் பக்கம் 131 முதல் பார்க்கவும்.*
ii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 133 முதல் பார்க்கவும்.*
iii. *தரம் 10 - பாடநூல் பக்கம் 93 முதல் பார்க்கவும்.*
iv. *தரம் 10 - பாடநூல் பக்கம் 109 முதல் பார்க்கவும்.*

(5x2=10 புள்ளிகள்)


LOL.lk
BookStore
විභාග ඉලක්ක
පහසුවෙන් ජයගන්න
ඕනෑම පොතක් ඉක්මනින්
නිවසටම ගෙන්වා ගන්න
| කෙටි සටහන් | පසුගිය ප්‍රශ්න පත්‍ර | වැඩ පොත් | සඟරා | O/L ප්‍රශ්න පත්‍ර
| A/L ප්‍රශ්න පත්‍ර | අනුමාන ප්‍රශ්න පත්‍ර | අතිරේක කියවීම් පොත්
| School Book | ගුරු අත්පොත්
pesuru Prakashana Private Ltd.
Akura Pilot
සමනල දැනුම
සතර
පෙර පාසලේ සිට උසස් පෙළ දක්වා සියළුම ප්‍රශ්න පත්‍ර,
කෙටි සටහන්, වැඩ පොත්, අතිරේක කියවීම් පොත්, සඟරා
සිංහල සහ ඉංග්‍රීසි මාධ්‍යයෙන් ගෙදරටම ගෙන්වා ගැනීමට
www.LOL.lk වෙබ් අඩවිය වෙත යන්න